

**சா**தியை எதிர்த்துப்
போராடுங்கள் ; அது
ஜனநாயகத்திற்கு எதிரி
என்பதால் !
மூடநம்பிக்கையை
எதிர்த்துப் போராடுங்கள்;
அது அறிவியலுக்கு எதிரி
என்பதால் !
ஆதிக்கத்தை எதிர்த்துப்
போராடுங்கள்; அது
சுதந்திரம் சமத்துவம்
சகோதரத்துவத்திற்கு
எதிரி என்பதால் !

-பேரறிஞர் அண்ணா

# கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி, அக். 19–

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் அவசர ஆலோசனை கூட்டம் நடை பெற்றது,

இந்த அவசர ஆலோசனை கூட்டத்திற்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார்,மாவட்ட துணை செயலாளர்கள் புவனேஸ்வரி பெருமாள்,காமராஜ், அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எத்திராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தி யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கலந்து கொண்டு பேசுகையில், கள்ளக்குறிச்சி மாவட்ட வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்இன்று (19ம் தேதி – சனிக்கிழமை) நடைபெறும் ஆய்வு கூட்டம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி சார்பில் கள்ளக்குறிச்சி வஉசி நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை திறந்து வைக்கவும் துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக வருகை தர உள்ளதையொட்டி தெற்கு மாவட்டத்தின் சார்பில் மணலூர்பேட்டை, மாடாம்பூண்டி கூட்டுரோடு, தியாக துருகம் நகர பகுதி,

கள்ளக்குறிச்சி டோல்கேட், கள்ளக்குறிச்சி நான்கு முனை சந்திப்பு ஆகிய 5 இடங்களில் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி, மகளிர் அணி மற்றும் பிற சார்பு அணி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று மிக பிரம்மாண்டமான முறையில் உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று பேசினார். இதில் கள்ளக்குறிச்சி நகர கழக செயலாளர் சுப்பராயலு,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தாகப் பிள்ளை,ஒன்றிய கழக செயலாளர்கள் வெங்கடாசலம், சத்தியமூர்த்தி, கனகராஜ். நெடுஞ்செழியன், அண்ணாதுரை, பெருமாள், அய்யனார், ராஜேந்திரன், கிருஷ்ணமூர்த்தி, துரைமுருகன், பாரதிதாசன், அசோக் குமார், மாவட்ட பிரதிநிதி மடம் பெருமாள், பேரூர் கழக செயலாளர் ஜெய்கணேஷ், தியாகதுருகம் ஒன்றிய சேர்மன் தாமோதரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாலாஜி பூபதி, சிலம்பரசன், ரமேஷ், பிற அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கொள்கை முரசொலித்த செல்வமே!

# மைத்துனருக்குத் துணையாய் மனவலிமை தந்தவரே!



செல்வம் நீ !
ஆம்!
கலைஞரின் செல்வம்!
கழகத்தின் செல்வம்!
முரசொலியின் செல்வம்!
கழகத்தின் முரசொலிக்கும் செல்வம் நீ!

உன் தோள் சாய்ந்து
நின்ற தலைவனை
துணையற்று ஆக்கலாமா?

மனசாட்சியாய்
மாமனுக்கு ஒரு மாறன்;
மைத்துனருக்கு ஒரு செல்வம்!

குவளை தந்த குலக் கொழுந்தே
கொள்கை காக்க
கூண்டில் நீ நின்றபோது
குவலயம் உன்னை ஏறிட்டுப் பார்த்தது!
கழகத்தவர் கண்களோ வியர்த்தது!
கலைஞரின் கொள்கைக் கூட்டமோ
உன்னைக் கொண்டாடி மகிழ்ந்தது!

மாமன் எண்ணம் போல்
முரசொலியைக் காத்தவரே!
மைத்துனர்க்குத் துணையாய்
மனவலிமை தந்தவரே!

மாமனைப் பார்க்க
ஏன் இந்த அவசரம்!
மைத்துனர் தவிப்பார் என்ற
அக்கறைதான் ஏன் இல்லை!

தாய் மாமனைப் பார்க்க
தவம் இருந்து சென்ற செல்வம்
தாய் மாமன் மகனை மட்டும்
தவிக்கவிட்டுச் செல்லலாமா ?

மாமன் மகனுக்கு
மனசாட்சியாய் இருந்து கொண்டு
மாளாத் துயரத்தில்
தள்ளிச் செல்லலாமா?

எங்கள்
இளந்தலைவர் அழுகின்றார்!
இல்லம் எல்லாம் சோகமயம்!

யார் யாரைத் தேற்ற,
தேற்றுவதற்கும் ஆளில்லை!

என்ன சொல்லி
நாங்கள் அழ .. !
யாரிருக்கிறார் எங்களைத் தேற்றிவிட !

யார் அடித்தும் அழாத நம்மை
மார் அடித்து அழவைத்தார்!

இழந்து விட்ட செல்வத்தை
எங்கு இனி நாம் காண!
முத்துவேலரின் பேரனே
முற்றுப் பெற்று விட்டதோ
உம் எழுத்து!

இல்லை இல்லை
முடிந்து தான் போகுமோ
உன் வரலாறு.

உன் மாமாவிடம் சொல்:
உங்களைப் போலவே
உங்கள் மகனும் ஆள்கிறார் என்று
கொள்கை உறுதியில்
உங்கள் பேரனும் உள்ளார் என்று!
போய் வாருங்கள் முரசொலியாரே!



**இராசா அருண்மொழி**
தமிழ்நாடு சீர்மரபினர் நலவாரிய
துணைத் தலைவர் -
விருதுநகர் தெற்கு மாவட்ட
துணைச் செயலாளர்

## திருவண்ணாமலை வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர்

# உதயநிதி ஸ்டாலினுக்கு - மாவட்ட எல்லையில் உற்சாக வரவேற்பு!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

*திருவண்ணாமலை, அக். 19 -*

திருவண்ணாமலைக்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு, திருவண்ணாமலை மாவட்ட எல்லையில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

இது குறித்து பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கையில்...

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்தான், தமிழ்நாட்டில் விளையாட்டுத்துறையே அகில இந்திய ளவில் மிகப்பெரிய அங்கீகாரம் பெற்றுள்ளது. விளையாட்டு வீரர்கள் மட்டும் அல்ல விளையாட்டுத்துறையே புத்துணர்ச்சி பெற்றுள்ளது.



தமிழ்நாடு துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழகம் முழுவதும், பம்பரமாக சுற்றி, சுழன்று மக்கள் பணியை செய்துவருபவரும், அனைவரையும் அச்சுறுத்தி வரும் வடகிழக்கு பருவமழையை, தன்னுடைய நிர்வாக திறமையாலும், ஆளுமையாலும் எந்தவித பாதிப்பும் இன்றி பொது மக்களை காத்து வருபவரும், கழகத்தின் இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,திருவண்ணாமலையில் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை அரசு அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் மேற்கொள்ளவுள்ளார்.

நேற்று (18.10.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்பென்னாத்தூர் ஒன்றியம், சோமாசிபாடி, சோ.காட்டுக்குளம் அருகில் மிக பிரமாண்டமான, உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இன்று (19.10.2024 - சனிக்கிழமை) காலையில் விளையாட்டு வீரர்களுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

எனவே மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

## வெளிப்படைத் தன்மையுடன்தான் துவரம் பருப்பும் பாமாயிலும் கொள்முதல் செய்யப்படுகிறது!

# பா.ஜ.க.வின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

*சென்னை,அக்.19-*

தரமான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் வெளிப்படைத் தன்மையுடன் கொள்முதல் செய்யப்படுகிறது என்று பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட ஆதாரமற்றக் குற்றச்சாட்டிற்குப் பதிலளித்து

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

அவரது அறிக்கை வருமாறு:

துவரம் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதல் மற்றும் விநியோகம் பற்றி விரிவாக அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதற்கு பின் கோயம்புத்தூர் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன் வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலளித்து மீண்டும் ஓர் அறிக்கை வெளியிட்டேன். திருமதி. வானதி சீனிவாசன் தன் அறிக்கையில் துவரம் பருப்பின் வெளிச்சந்தை விலை ரூ. 200/- என்று குறிப்பிட்டிருந்தார். அதே கட்சியைச் சேர்ந்த செய்தித் தொடர்பாளர் அவர் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததைக் கூட அறியாமல் எவ்வித ஆதாரமுமின்றி ஒரு குற்றச்சாட்டைத் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வெளிச்சந்தையில் பருப்பு விலை என்ன என்பதைக் கூட அறியாமல் அல்லது அறிந்தும் உள்நோக்கத்துடன் வாய் புளித்ததோ

மாங்காய் புளித்ததோ என்று ஆதாரமற்ற குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறார். ஒரு கடையில் (02CB047NC - அன்பழகன் நகர் - 2) பருப்பு இல்லை என்று இன்னொரு குற்றச்சாட்டையும் ஆதாரமில்லாமல் தெரிவித்துள்ளார்.

அவர் குறிப்பிட்ட கடையில் 1319 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தக் கடைக்கு அக்டோபர் 24 மாதத்திற்கு ஏற்கனவே இருப்பில் இருந்த 53 கிலோவுடன் 1119 கிலோ துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு

800 கிலோ துவரம் பருப்பு நகர்வு செய்யப்பட்டு இது வரை 605 கிலோ துவரம் பருப்பு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அது போக 248 கிலோ துவரம் பருப்பு இந்தக் கடையில் இன்று இருப்புள்ளது.

17.10.2024 அன்று கூட 39 குடும்ப அட்டைதாரர்கள் துவரம் பருப்பைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எவ்வாறு கொள்முதல் செய்யப்படுகிறது என்பதை அறியாதவர்களுக்கும் பா.ஜ.க செய்தித் தொடர்பாளருக்கும் அதன் விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஒளிவு மறைவற்ற திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன் படி ஒரு ஆங்கில நாளிதழிலும், தமிழ் நாளிதழிலும் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதலுக்கு விலைப்புள்ளிகள் கோரி விளம்பரம் செய்யப்படும். அதோடு இணைய வழியிலும் (e-tender) விளம்பரம் செய்யப்படுகிறது. இந்தியா முழுதும் செய்யப்படும் விளம்பரங்களைப் பார்த்துச் சமர்பிக்கப்படும் விலைப்புள்ளிகள் மற்றும் மாதிரிப் பொருள்களை (Sample) ஒப்பந்தக் கூராய்வுக் குழு (Tender Scrutiny Committee) ஆய்வு செய்யப்பட்டு, தரம் மற்றும் தகுதிகள் உள்ள நிறுவனங்களின் விலைப்புள்ளிகளைக் குழுமத் துணைக் குழு (Board Sub Committee) ஆய்வு செய்து குறைந்த



விலைப்புள்ளிகள் அளித்த நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி இறுதிப் பட்டியலை முடிவு செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

துணைக் குழுவில் உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனர் மற்றும் துணைச் செயலாளர் (பட்ஜெட்) ஆகிய மூன்று இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் இடம் பெற்றுள்ளார்கள்.

துணைக்குழு ஒப்பந்ததாரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி விலைக்குறைப்பு செய்து முடிவு எடுத்ததைப் பதினொன்று இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்ட தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாகக் குழு பரிசீலனை செய்து இறுதி முடிவு எடுத்துக் குறைந்த விலைப்புள்ளிகள் அளித்த நிறுவனங்களுக்குக் கொள்முதல் ஆணைகள் வழங்கப்படுகின்றன.

மெஸர்ஸ் சி.ப்பி ஃப்புட்ஸ், விருதுநகர் என்ற நிறுவனம் கனடா மஞ்சள் பருப்பினைக் கொள்முதல் செய்யக் கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். டபிள்யு. ப்பி.2377/2023 யின் தீர்ப்புரையில் பருப்பு கொள்முதல் செய்யும்போது எந்த பருப்பு விலை குறைவாக உள்ளதோ அந்த பருப்பினைக் கொள்முதல் செய்வதில் முன்னுரிமை வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த மாதத்தில் (செப்டம்பர் - 2024), அனைத்துப் பருப்புகளிலும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த ஐந்து நிறுவனங்களுக்குக் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது. பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்ட அக்ரிகோ என்ற நிறுவனம் பேச்சு வார்த்தையிலேயே கலந்து கொள்ளவில்லை.

ஆதலால், முறைப்படி வெளிப்படைத் தன்மையுடன் முடிவெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் துறை அமைச்சரைப் பற்றியோ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனரைப் பற்றியோ குறை கூறுவதில் அர்த்தமில்லை. ஒப்பந்தப்படி உரிய காலத்தில் விநியோகம் செய்யாத நிறுவனங்கள் மீது ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளின்படி தாக்கீது அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படியிருக்க ஒரு பொறுப்புள்ள கட்சியின் செய்தித் தொடர்பாளர் எவ்வித ஆதாரமும் இல்லாமல் 100 கோடி ரூபாய் இழப்பு மற்றும் ஊழல் என்று கூறுவது

முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானது. அதே போல் குறிப்பிட்ட ஒரு கடையில் பருப்பு இல்லை என்று கூறியிருப்பதும் அவரது அறியாமையைக் காட்டுகிறது. ஆதலால் பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் தன்னுடைய ஆதாரமற்ற குற்றச்சாட்டைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில்

# ரூ.1.78 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

*புதுக்கோட்டை, அக். 19-*

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், ரூ.1.78 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் 17.10.2024 அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;

கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

அதன்படி, கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி ஊராட்சியில் ரூ.72.08 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சுயஉதவிக் குழு கட்டடம், கல்லாக் கோட்டை ஊராட்சியில் ரூ.23.57 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் மற்றும் ரூ.14 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையக் கட்டடம், நடுப்பட்டி ஊராட்சியில் ரூ.14 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையக் கட்டடம், ஆத்தங்கரைவிடுதி ஊராட்சியில் ரூ.39.95 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி செயலக கட்டடம் மற்றும் ரூ.14 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் என மொத்தம் ரூ.177.6 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

எனவே இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் இதுபோன்று திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்களை உரிய முறையில் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு ஒன்றியம் புது புளியம்பட்டியைச் சார்ந்த அ.தி.மு.க. ஊராட்சி மன்றத் தலைவர் செல்வகுமார், துணைத் தலைவர் சந்திரன், கிளை நிர்வாகிகள் செல்வகுமார், சுப்பிரமணி, செங்கோட்டையன், செல்வம், ராசாத்தி, சாந்தி, மஞ்சு உட்பட 100 பேர் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில், ஒன்றியக் கழகச் செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல் ஏற்பாட்டில் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர். அவர்களை மாவட்டக் கழகச் செயலாளர் வரவேற்று சால்வை அணிவித்தார். ஒன்றிய பெருந்தலைவர் சுஜாதா தங்கவேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகர் மன்றத் தலைவர் நளினி சுரேஷ் பாபு, நகரக் கழக செயலாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.